# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**Under Section 173 BNSS**

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075290

C

1. District : புதுக்கோட்டை மாவட்டம் | PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம் | Year: ஆண்டு | FIR No.: 04/2024 மு.த.அ. எண் | Date: 20.08.2024 நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (திருத்தப்பட்டது 2018) | Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 29.07.2024, 12.08.2024, 13.08.2024 | Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.08.2024 | Time : நேரம் 19.30

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி மூலம் டைப் செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 70 கி.மீ. கிழக்கு.

   Beat Number : முறைக் காவல் எண்

   (b) Address : முகவரி — மீமிசல் கடைவீதியில் Dr. சுந்தர் மருத்துவ கிளினிக்கிற்கு அருகில் SBI ATM மாடியில் உள்ள அறை.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஜமால் முகமது | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அப்துல் வதூத்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் | (g) Address முகவரி 3/88, பொய்யாதநல்லூர், மீமிசல் அஞ்சல், ஆவுடையார்கோவில் தாலுகா, புதுக்கோட்டை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. சதீஷ்குமார், கிராம நிர்வாக அலுவலர், பொன்னமங்கலம், ஆவுடையார்கோவில் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியின் விண்ணப்பத் தன்மை மற்றும் எதிரியின் நடத்தைகள் குறித்து ரகசிய விசாரணை செய்ததால்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித் தாளில் இணைக்கப்பட்டது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின்_ புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
20/8/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
20/8/24

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.08.2024

Name: பெயர் இமயவரம்பன்
Rank: நிலை காவல் துணை கண்காணிப்பாளர்
மாவட்ட குற்றப் பதிவு மற்றும் கண்காணிப்பு மையம், புதுக்கோட்டை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**Attachment to Column 12 of First Information Report in Pudukkottai V&AC Cr.No.04/2024**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளராகிய நான் 19.08.2024–ஆம் தேதி மாலை 7.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது A.ஜமால்முகம்மது. த/பெ.அப்துல்வதுத், எண்.3/88, பொய்யாதநல்லூர், மீமிசல் அஞ்சல், ஆவுடையார்கோவில் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் புதுக்கோட்டை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கம்யூட்டரில் டைப்செய்த ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:– அனுப்புநர்– A.ஜமால்முகம்மது. த/பெ.அப்துல்வதுத், எண்.3/88, பொய்யாதநல்லூர், மீமிசல் அஞ்சல். ஆவுடையார்கோவில் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம், பெறுநர்– காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, புதுக்கோட்டை. அய்யா, நான் பொய்யாதநல்லூரில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய உடன்பிறந்த தம்பி ராவுத்தர்நைனாமுகமது என்பவரின் குடும்பமும் பொய்யாதநல்லூரிலேயே வசித்து வருகிறது. எனது தம்பி சென்னையில் உள்ள ஒரு ஹோட்டலில் வேலை செய்து வருகிறார். எனது தம்பியின் மனைவி சோபியாபானு என்பவர் குழந்தைகளுடன் பொய்யாதநல்லூரில் வசித்து வருகிறார். சோபியாபானு பெயரில் கடந்த நவம்பர் மாதம் 2023–ஆம் ஆண்டு வீழிமார் கிராமத்தில் வசிக்கும் பிச்சை மகன் காசி என்பவரிடமிருந்து வீழிமார் கிராம சர்வே எண்.22/7–ல் உள்ள 17 1/4 சென்ட் நஞ்சை நிலத்தை எனது தம்பி வாங்கினார். எனது தம்பி சென்னையில் இருப்பதால் மேற்கண்ட இடம் வாங்குவது தொடர்பான அனைத்து வேலைகளையும் நான் உடனிருந்து செய்து கொடுத்தேன். மேலும் மேற்கண்ட இடம் வாங்கியதை கடந்த 13.09.2023–ஆம் தேதி மீமிசல் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.879/2024–ன்படி பதிவு செய்யப்பட்டது. அதன்பிறகு எனது தம்பி மேற்கண்ட இடத்திற்கு அவரது மனைவி பெயரில் பட்டா மாறுதல் வாங்க ஏற்பாடு செய்யும்படி என்னிடம் சொன்னார், அதனால் நான் 20.07.2024 ஆம் தேதி இ–சேவை மையம் மூலமாக பட்டா மாறுதலுக்கு எனது தம்பி மனைவி சோபியாபானு பெயரில் விண்ணப்பித்தேன். அது சம்மந்தமாக தொடர்பு கொள்ள எனது கைபேசி எண்ணான 9710018814–ஐ கொடுத்தேன். அதன்பிறகு கடந்த 24.07.2024–ஆம்

தேதி எனது செல்போனிற்கு பொன்னமங்கலம் VAO சதீஷ்குமார் என்பவர் போன் செய்து என்னுடைய தம்பி மனைவியின் பெயரில் வாங்கப்பட்ட மேற்கண்ட இடத்திற்கு பட்டா மாறுதல் செய்ய இணையதளத்தில் விண்ணப்பம் வந்திருப்பதாகவும், அது சம்மந்தமான ஆவணங்களின் நகல்களை மீமிசல் கடைவீதியில் உள்ள டாக்டர்.சுந்தரவடிவேல் கிளினிக் அருகிலுள்ள SBI ATM–க்கு மாடியில் உள்ள ரூமில் வந்து கொடுக்கும்படி கூறினார். அன்றே நான் பட்டா மாறுதலுக்கு இணையதளத்தில் பதிவேற்றம் செய்த ஆவணங்களின் நகல்களை கொண்டுபோய் மேற்படி ரூமில் VAO சதீஷ்குமாரிடம் கொடுத்தேன். அதன்பிறகு கடந்த 29.07.2024–ஆம் தேதி VAO சதீஷ்குமார் எனக்கு போன் செய்து பட்டா மாறுதல் செய்ய செலவுக்கு பணம் கொடுங்கள் என்று சொன்னார். அதற்கு நான் என் தம்பி மனைவியிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொன்னேன். அதன்பிறகு கடந்த 12.08.2024 ஆம் தேதி பொன்னமங்கலம் VAO சதீஷ்குமார் எனக்கு போன் செய்து நான் செலவுக்கு கேட்ட பணம் என்னாச்சு என்று கேட்டார். அதற்கு எவ்வளவு ரூபாய் என்று சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.3,000/– கொடுங்கள் என்று சொன்னார். நான் எனது தம்பி மனைவியிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொன்னேன். மறுநாள் 13.08.2024–ஆம் தேதி VAO சதீஷ்குமார் எனக்கு போன் செய்து பணம் என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் எனது தம்பி மனைவியிடம் பேசிவிட்டேன், தற்போது பணமில்லாததால் பணத்திற்கு ஏற்பாடு செய்து தருகிறேன் என்று சொன்னார் என்று கூறினேன். அதற்கு VAO சதீஷ்குமார் அவர் செலவுக்கு கேட்ட பணம் கொடுத்தால்தான் பட்டா மாறுதல் சம்மந்தமான வேலையை ஆரம்பிப்பேன், அதனால் சீக்கிரம் பணத்தை கொண்டு வந்து கொடுங்கள் என்று சொன்னார். நான் ஒன்றும் சொல்லவில்லை. அதன்பிறகு இன்று 19.08.2024–ஆம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு VAO சதீஷ்குமார் எனக்கு போன் செய்து, ரொம்ப நாளாகிவிட்டது, நாளைக்கு நான் கேட்ட பணம் ரூ.3,000த்தை மீமிசலில் உள்ள எனது ரூமில் வந்து கொடுங்கள், இல்லை என்றால் உங்களது தம்பி மனைவியின் பட்டா மாறுதல் விண்ணப்பத்தை ரத்து செய்துவிடுவேன் என்று சொன்னார். எனக்கோ, எனது தம்பி மற்றும் அவரது மனைவிக்கோ லஞ்சமாக பணம் கொடுத்து பட்டா மாறுதல் பெற விருப்பமில்லை. ஆகவே நான் புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று 19.08.2024ஆம் தேதி மாலை 7.30 மணிக்கு வந்து, பட்டா மாறுதல் செய்வதற்கான

வேலைகள் செய்ய என்னிடம் ரூ.3,000/- லஞ்சமாக கேட்ட பொன்னமங்கலம் VAO சதீஷ்குமார் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி, நான் எடுத்து வந்த கணினி மூலம் தயார் செய்த புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) / A.ஜமால்முகம்மது, 20.08.2024.

Sir, Received the above computer typed complaint on 19.08.2024 at 19.30. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Pudukkottai Vigilance and Anti-Corruption Cr.No.04/2024 u/s 7 (a) of Prevention of Corruption Amendment Act-2018 at 07.00 hrs today on 20.08.2024 and took up for investigation. (Sd-) G.Imayavaramban, Deputy Superintendent of Police, /V&AC/PK.

Original FIR along with Original Computer typed complaint of Tr.A.Jamalmohammed, S/o Abdulvathuth, No.3/88, Poiyathanallur, Mimisal Post, Avudaiyarkovil Taluk, Pudukkottai District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate/Special Judge for trial cases under Prevention of Corruption Act, Pudukkottai and a copy of FIR is submitted to the Director Vigilance and Anti-Corruption, Chennai.

20/8/24
G. Imayavaramban
Dy Superintendent of Police
Vigilance and Anti Corruption
Pudukkottai